www.Padasalai.Net www.TrbTnpsc.com

வகுப்பு : 9

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2023

நேரம் : 1.30 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி – I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6x1=6

1. பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த சான்று ----------
   (அ) மாமல்லபுரம் (ஆ) பிள்ளையார்பட்டி (இ) தாடிக்கொம்பு (ஈ) திரிபுவனவீரேசுவரம்
2. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப் பகுதி ------
   (அ) குறிஞ்சி (ஆ) நெய்தல் (இ) முல்லை (ஈ) பாலை
3. பூவாது காய்க்கும், மலர்க்கை – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   (அ) பெயரெச்சம், உவமைத்தொகை (ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   (இ) வினையெச்சம், உவமை (ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
4. நச்சிலைவேல், கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு – இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே
   (அ) பாண்டிய நாடு, சேரநாடு (ஆ) சோழ நாடு, சேரநாடு
   (இ) சேரநாடு, சோழநாடு (ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

கல்வி இல்லாத பெண்கள்
களர்நிலம் அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை

5. இப்பாடலை இயற்றியவர் யார்?
   (அ) கம்பர் (ஆ) பாரதிதாசன் (இ) பாரதியார் (ஈ) காரியாசான்
6. **மோனைச் சொல்லைத் தேர்க.**
   (அ) இல்லாத, நல்ல (ஆ) கல்வி, களர்நிலம் (இ) புதல்வர்கள், பெண்கள் (ஈ) புதல்வர்கள், இல்லை

பகுதி – II பிரிவு – 1

II. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். (வினா எண் 11 கட்டாய வினா)** 3X2=6

7. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
8. இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?
9. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?
10. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?
11. 'தலை' என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு – 2

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3X2=6

12. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக்குறிப்புத் தருக.
13. தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.
14. விகாரப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
15. **கலைச்சொல் தருக.**
    அ) Volunteer ஆ) Treasury
16. **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**
    அ) நேற்று தென்றல் காற்று அடித்தது ஆ) அணில் பழம் சாப்பிட்டது.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி – III பிரிவு – 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3X3=9

17. இராவண காவியத்தில் இடம் பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

18 மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.

19. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

20. திருக்குறளை அலகிட்டு வாய்பாடு எழுதுக.

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை

21. 'மாகால் எடுத்த முந்நீர்போல' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு – 2

22. **அடிபிறழாமல் எழுதுக.** 1X3=3

'பூவாது காய்க்கும்' – எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலம் பாடலை எழுதுக.

(அல்லது)

'கல்லிடைப் பிறந்த' – எனத் தொடங்கி 'பாயும்' என முடியும் இராணவ காவியப் பாடல்.

## பகுதி – IV

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2X4=8

23. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

24. உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

25. நீங்கள் செய்த பணிக்குள் உங்களை மகிழச் செய்த பணிகள் நான்கினை எழுதுக.

26. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



27. **படிவத்தை நிரப்புக.**

**தன்விவரப் படிவம்**

மாணவர் பெயர் :
வகுப்பு :
பள்ளி :
பிறந்த தேதி :
முகவரி :

## பகுதி – V

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2X6=12

28. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்து செய்திகளை விவரிக்க.

29. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

30. முன்னுரை – உயிர்ப்பாதுகாப்பின் முதல் படி – தேசிய நெடுஞ்சாலைகள் – மாநில நெடுஞ்சாலைகள் – சிற்றூர்ச் சாலைகள் – வேகக்கட்டுப்பாடு – சாலை விதிகள் – முடிவுரை.

குறிப்புகளைக் கொண்டு சாலைப் பாதுகாப்பு என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

27. கொடுக்கப்பட்டுள்ள தன்விவரப் படிவத்தினை நிரப்புக.

## தன் விவரப் படிவம்

1. பெயர் : ______________________
2. வகுப்பு : ______________________
3. பள்ளி : ______________________

______________________

4. பெற்றோர் : ______________________

______________________

5. முகவரி : ______________________

______________________

______________________

______________________

6. தொலைபேசி எண் : ______________________

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com